விவசாயிகள் வீடு கட்டிக் கொள்ளக் கடன்.

124.—(*வினா எண் 800)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) விவசாயிகள் சொந்தமாக வீடுகள் கட்டுவதற்கு குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, விடை (அ) மற்றும் (ஆ): வீடுகள் கட்டுவதற்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவும் திட்டம் கிராமப்புறங்களில் உள்ள நலிவுற்ற பிரிவினருக்குச் செயல் படுத்தப்படுகிறது. பொருளாதாரத்தில் நலிவுற்ற விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே வசிக்கக்கூடிய விவசாயி கள் நிரம்ப வெறும் கூரை வீடுகளிலே வசித்துக் கொண்டு இருக்கி றார்கள். நாம் கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக ஒரு ஊருக்கு 10 வீடு, 15 வீடு என்று கொடுத்துக் கொண்டு தான் இருக்கிறோமே தவிர, அவர்களுக்கு அந்த வீடுகளை முழுமையாகக் கட்டுவதற்கான உதவி செய்யவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? எனவே நீங்கள் எங்கே எல்லாம் கூரை வீடுகள் இருக்கின்றனவோ, விவசாயி களுக்கு, அங்கே ஹவுசிங் யூனிட்டிலிருந்தே அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயாவது குறைந்த வட்டியில் கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே இந்தக் கூட்டுறவுச் சங்கங் கள மூலமாகத்தான் கடன் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதிலே பல்வேறு பிரிவினரும் விவசாயிகள், தொழிலாளர்கள் அனை வரும் இந்தக் கடன் உதவி பெற்று வீடு கட்டிக் கொள்ளலாம். மாண்புமிகு திருமதி பொன்னம்மாள் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஆங்காங்கே இப்படிப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுக்கமுடியுமா என்று கேட்கிறார்கள். வீட்டுவசதி வாரியம் இதுவரை நகர்புறங்களிலேயும் இது தவிர தமிழ்நாடு முழுவதிலும் 35 மாடல் டவுன் என்ற அளவிலே தான் இன் றைக்கு வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கி றார்கள். எங்காவது இந்த வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக

மேலும் வீடுகளைக் கட்ட வேண்டும் என்று எண்ணினால், அதற்கான நிலத்தை நீங்கள் தருவதற்கு ஏற்பாடு செய்தால் நிச்சயமாக ஆங்காங்கே வீடுகளைக் கட்டித்தர நாங்கள் முன் வருவோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக அங்கங்கே உள்ள டவுன்களுக்குத் தான் வீடு என்று சொல்லும் போது சற்று வேதனையாக இருக்கின்றது. காரணம் நீங்கள் எந்தத் துறையிலே வாங்குவீர்களோ தெரியாது, கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் கட்டப்படக்கூடிய வீடுகளுக்குக் குறைந்த அளவிலே ஒரு ஊருக்கு 10 வீடு, 13 வீடு, அதற்கு மேல் பணம் இல்லைஎன்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து உலக வங்கி மூலமாகவோ ஹட்கோ திட்டத்தின் மூலமாகவோ, தயவு செய்து—பட்டா தான் மூலதனமாக வைத்திருக்கிறார்களே, அப்பேர்பட்ட ஏழை மக்களுக்கு—ஆர். எல்.இ. ஜி.பி., என். ஆர்.இ. பி., திட்டத்தின் மூலமாக அரிஜன மக்களுக்கு மட்டும்தான் கட்டி வருகிறோம். பாக்கிப் பேரை நாம் தொடுவதுகூட இல்லை. அந்த அளவிற்கு எல்லா ஏழை மக்களுக்கும் கட்டக்கூடிய அளவில் உலக வங்கி மூலமாக வாவது கடன் வாங்கிக் கொடுத்து, வீடு கட்டும் திட்டத்தை மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்வி நியாய மான கேள்வி. ஏனென்றால் இன்றைக்கு ஆதிதிராவிட நலத் துறை மூலமாகவும் மீன் வளர்ச்சித் துறை மூலமாகவும் இன்னும் என். ஆர். இ. பி., போன்ற அந்தத் திட்டங்களின் மூலமாகவும் கட்டப்படுகிற வீடுகள் எல்லாம் அங்கே உள்ள ஆதிதிராவிட மக்களுக்கும் மீனவர்களுக்கும் தான் பயன் தருகிறது, ஆகவே, மற்றவர்களுக்குச் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் கடன் கொடுக்கப்படுகிறது. அங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டம் இல்லை. ஆகவே இவைகளையெல்லாம் சேர்த்து கிராம வீடு கட்டும் வாரியம் என்ற அளவிற்கு ஒரு வாரியத்தை உருவாக்கி, இப்போது ஹவுசிங் போர்டு—வீட்டு வசதி வாரியம் இருக்கிறதே, அதுபோல் கிராமங்களிலேயும் வீடுகளைக் கட்டித் தருகின்ற அளவிற்கு கிராம வீட்டு வசதி வாரியம் என்ற ஒரு வாரியத்தை ஏற்படுத்தலாமா என்பது அரசினுடைய பரிசீலனை யில் இருக்கின்றது.

(முற்பகல் 9-40.)

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும் போது கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலமாக இந்த வீட்டு வசதியை பெறுவதற்கு

கடன் பெறலாம் என்று சொன்னார்கள். ஆனால் அந்த கூட்டுறவு சங்கங்களில் விசாரித்தபோது குறிப்பிட்ட பகுதி, குறிப்பிட்ட கிராமம் என்று 'ஏரியா ஆப்பரேஷன்' என்ற முறையில் விதி வைத்து இருக்கிறார்கள். இதை அனைத்து கிராமங்களுக்கும் அனைத்து தகுதியுள்ள தொழிலாளர்கள், விவசாய பெருங்குடி மக்களுக்கும் வீடு கட்டுவதற்கு அந்த சங்கங்களின் மூலம் அரசு ஏற்பாடு செய்து கொடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக எனக்குத் தரப்பட்டிருக்கின்ற தகவல் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு சங்கம் என்ற அளவுக்கு 165 கிராம கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அதேபோல் நகர்புறங்களில் மொத்தம் 480 கூட்டுறவு சங்கங்கள் நகர்புற கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அறிகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஏறத்தாழ இந்த ஆண்டுக்கே 72 கோடி ரூபாய் கடன் ஆக ஆங்காங்கே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கும் மேலாக கடன் வேண்டும் என்று மனுக்கள் இருக்கத்தான் செய்கின்றன. இங்கே ஒரு கஷ்டம் என்னவென்றால், கிராமப்புறங்களில் ஏற்கெனவே ஆதிதிராவிடர்களுக்கு, மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிகொடுக்கின்ற காரணத்தால் இந்தப் பட்டியலில் வரக்கூடிய பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினரை சேர்ந்த ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 8 ஆயிரம் ரூபாய் கடன் பெற்றுவிட்டு அந்தக் கடனை திருப்பிக் கொடுப்பதில் சங்கடம் இருக்கிறது. ஆகவே இதை நாங்கள் மனதிலே கொண்டு அதையும் ஓரளவுக்கு மானியமாக கொடுக்கமுடியுமா (கைத்தட்டல்) என்பதை நாங்கள் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். கூடிய விரைவில் அமைச்சரவை அதற்கான முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

இராயபுரம் இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்துதல்.

97— (*வினா எண் 170)— **தி. இரா. மதிவாணன், திரு. கோ. பூவராகன்** மற்றும் **திரு. மா. சுந்தரதாஸ்**; மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம், மன்னார்சாமி கோயில் தெரு முனையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ; இல்லை.